# MUGAVARI FOUNDATION

மனிதனுக்கு வாழ்க்கையை நடத்த, முழுமையடைய அத்தியாவசியமான மூன்று விதமான தேவைகள் உள்ளன: உணவு, உறைவிடம், உடுப்பு. இம்மூன்றும் கிடைக்கப்பெற்றதால் அடுத்த நிலையான கல்வி பற்றி விரிவாக சிந்தித்து அதில் முன்னிலையிலும் வகிக்கின்றனர் இவர்கள்.

தமிழ் நாட்டிலுள்ள பல கிராமங்களிலிருந்து வந்தவர்கள், படித்து முன்னேற வேண்டும் என்று ஆர்வம் கொண்டவர்கள்.

பல முகவரிகள் கொண்ட இவர்கள் ஓர் முகவரியாய் கல்வி என்னும் பொக்கிஷத்துடன் **முகவரி பவுண்டேஷன்** அமைப்பிலிருந்து வெளியுலகுக்கு வருகின்றனர்.

முகவரியின் தோற்றம், வளர்ச்சி, பின்னணி பற்றி தெரிந்துக் கொள்ள ஆர்வம் மேலிட்டதால் சேகரித்த தகவல்கள் பற்றி சேர்ந்து சிந்திப்போமாக: ஆரத்தி அக்ரஹாரம் என்னும் சிறு கிராமம் ஆத்தூரில் உள்ளது. அந்த பண்பட்ட மண்ணில் குப்புடையார், பட்டத்தாள் தம்பதிக்கு பல இளைஞர்களின் வாழ்வில் அறியாமை என்னும் இருளை போக்க இரண்டாவது மகனாக பிறந்தவர்தான் **திரு. ரமேஷ்**.

திரு.குப்புடையார்க்கு கல்வி பற்றிய அவசியம் தெரிந்ததனால் தனது குடும்பம் எழ்மை நிலையில் இருப்பினும் அவருடைய மைத்துனரை படிக்கவைத்து அழகு பார்த்துள்ள செய்தியை பின்னாளில் கேள்விப்பட்டுள்ளார் ரமேஷ். அன்றுதான் ரமேஷ் சமுதாயப் பணிக்கான முதல் விதை விதைத்தார்.

ரமேஷ் பள்ளிப் படிப்பு, கல்லூரிப் படிப்பு பல இடர்பாடு களுக்கு நடுவே முடித்துள்ளார். தணிக்கையாளராக ஆக வேண்டும் என்று பயில்வதற்காக ஓர் தணிக்கையாளரிடம் பயிற்சி பெற்று வந்த காலங்களில் தன்னுடைய சகோதரிக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் சென்னையில் அரசு மருந்துவமனையில் சேர்த்தும் சிகிச்சை பலனின்றி அவருடைய சகோதரி இறைவனிடம் தஞ்சம் அடைந்தார். இதன் பாதிப்பே பணிக்கான இரண்டாவது காரணம்.

படிப்பதின் அவசியமும், படித்திருந்தும் அலட்சியப் போக்கினால் அக்காவின் மரணம் இவை இரண்டும் அவரை சமுதாயப் பணியில் 2002ல் இறங்க வைத்தது

தங்கள் ஊரை சேர்ந்த கஸ்தூரி என்னும் மாணவி மருத்துவ படிப்புக்கு உதவி எதிர்பார்த்து அலைந்து திரிந்துள்ளாள். (2002) கஸ்தூரிக்கு உதவ ஆரம்பித்ததுதான் முகவரிக்கான முதல் பயனாளி. இன்றோ 100 இளைஞர்கள் பயன்பெற்று வருகின்றனர். இன்று கஸ்தூரி M.B.B.S முடித்து M.D பயின்று வருகிறார்.

ரமேஷிற்கு சிறுவயதிலிருந்தே உதவி தேவையுள்ளவர் களுக்கு வலியச் சென்று உதவக்கூடிய குணம் இயல்பாகவும், அப்பாவின் தாக்கத்தினாலும், அக்காவின் அன்பினாலும் உண்டாகிவிட்டது. குறிப்பாக மாற்றுத் திறனாளிகளுக்கு நிறைய உதவ ஆசைக் கொண்டு அவர்கள் கற்பதற்காக அவர்களின் புத்தகங்களை வாசித்துக் காட்டுவாராம் இதை பற்றிக் கூறிய போது இது தாகமல்ல எனத் தோன்றியது.

முகவரியில் உள்ளவர்களுக்கு தினமும் உள்ள பணிகளின் அட்டவனைப் பற்றிக் கேட்ட பொழுது அவர் கூறியவை. தற்சமயம் முகவரி மூலமாக 73 ஆண்கள், 27 பெண்கள் உயர்கல்வி உதவி பெறுகின்றனர்.

அதில் ஆறு மருத்துவ மாணவர்கள், ஐந்து ஆராய்ச்சி மாணவர்கள், ஒன்பது அண்ணா பல்கலைக்கழக மாணவர்கள், civil service என்று சொல்லக் கூடிய IAS என்று பத்து மாணவர்கள், M.S.C. MBA. MCA என்று பத்து மாணவர்கள், B.E படிக்கின்ற சுமார் முப்பது மாணவர்கள், மீதம் உள்ள வர்கள் B.A. B.COM பயில்கின்றனர்.

இதில் முக்கியமாக இருபத்து ஆறு பேர் கொண்ட இளை ஞர் குழு ஓர் கூரையின் கீழ் தங்கி பயில்கின்றனர்.

அவர்களின் தினப்படி யோககலை பயிற்சி, தியானம், சிற்றுண்டி, கல்லூரிக்கு செல்லுதல், மாலை திரும்பியதும்

தினசரி நாட்டு நடப்பு பற்றிய கலுந்துரையாடல், கிராமப் பின்னணி கொண்ட யாவரும் ஆங்கிலத்தை வாய்மொழி பேசுதல் பயிற்சி இவ்வாறு தொடர்ந்து பயிற்சி செய்து வருவதால் இவர்களின் விழிப்புணர்வு முழுமையான அள வில் வளர்ந்துள்ளது.

அதற்கு உதாரணமாக இங்கு பயில வந்த மாணவன் வெற்றிவேல் இன்று முகவரிக்கான அனைத்து நிர்வாக பணிகளை அவனாகவே ஏற்றுக்கொண்டு, தயாரித்து அதை யாவரும் பின்பற்றும் அளவில் உள்ளது என்பது முகவரியின் வெற்றியாகும்.

இன்று இருபத்து ஆறு பேர் தங்கி படித்துக் கொண்டிருப்ப தற்கு முதல் முழுக்காரணம் சைதை துரைசாமி ஐயா அவர்களின் அரவணைக்கும் கரங்களால் தான் இந்தளவுக்கு சாதிக்க இயன்றது என்பது இவர்கள் இரத்தத்தில் கலந்த விஷயமாகும்.

தாங்கி பிடிப்பவர் இவர் என்றால் அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்கின்றவர் அண்ணன் திரு.கிருஷ்ணமூர்த்தியை பற்றி கண்டிப்பாகச் சொல்ல வேண்டும். உயர்கல்விக்கு தேவையான உதவியை என்றும் சலித்துக் கொள்ளாமல் செய்யும் பரந்த மனம் உடையவர் என்றால் மிகையாகாது.

ஆரம்பத்தில் முகவரிக்கு தொண்டாற்ற, உதவிய மங்கள புரம் சரவணன் என்னும் நபர் தந்த முதல் நன்கொடையை என்றும் மறவாமல் உள்ளார் இவர். ரமேஷின் தாயும், தம்பி லட்சுமணனும் அவரின் செயல்களுக்கு மிகவும் பக்கபலமாக இருந்துள்ளனர். உதவிக்கரம் நீட்டிய அன்பர்கள் பட்டியல் மிக நீளம். நன்றி என்ற ஒற்றை வார்த்தை தான் அவர்கள் யாவருக்கும் முகவரி வளர்ச்சிக்கான, வளர்ந்ததற்கான காரணம் என்று கூறிக் கொள்வதில் பெருமை அடைகின் றேன் என்றார்.

மகத்தான பணிபுரிகின்ற இவர் சாதாரணமாக இந்த நிலையை அடையவில்லை பல இடர்பாடுகளில் சிக்கிய பொழுதெல்லாம் தனக்கு Role Model ஆகயிருக்கும் அப்பா, மற்றும் தன்னை வழிநடத்தும் சத்குரு ஜக்கி வாசுதேவ் அவர்களை பணிந்து சிக்கல்களிருந்து மீண்டுள்ளார்.

பலதரப்பட்ட கிராமங்களிலிருந்து வந்த இளைஞர்களை ஈஷா யோகா பயிற்சியால் ஓர் அலைவரிசையுடன் இயங்க வைக்கின்ற ரமேஷ். இவர்களிடமிருந்து எந்த விதமான எதிர்பார்ப்புகளுடன் உள்ளீர்? என்று கேட்டோம்.

அதற்கு ரமேஷ், எனக்கு தனிப்பட்ட முறையில் எந்த உதவியும் தேவையில்லை. முகவரியில் பயிலும் மாணவர்களுக்கு கல்வியறிவு கொடுக்க கூடியவர்கள் மற்ற மாணவர்களுக்கு பயில உதவ முன் வரவேண்டும். அதற்கு நேரம் இல்லாதவர் கள் பணம் தந்து உதவினால் இன்று 100 இளைஞர்கள் படித்துக்கொண்டிருக்கும் நிலை 300 ஆன எங்கள் இலக்கு எளிதில் அடைவோம். இந்த இரண்டை விட மூன்றாவதான உழைப்பு தர கூடியவர்களுக்கு முகவரியின் நெஞ்சார்ந்த நன்றியை நல்குவோம். எதிர்பார்ப்பை விவரித்ததில் இவரின் பாங்கும் புரிந்தது.

பல விஷயங்கள் பற்றி ஆராய்ந்து பேசிய கணம் சமூகப் பார்வையாக அவர் சொன்னவை: தனக்கு உள்ள தேவைகள், லாபம் இவற்றையே மனதில் கொண்டு செயல்படும் நிலையில் மாற்றம் வந்தால் சமுதாயம் சிறப்பாகயிருக்கும் என்று கூறினார்.

நிறைய ஊடகங்கள் பேசக் கூடிய நிலையில் உள்ள இவர்கள் முழுமையாக சாதித்த பின்னர் தான், வெளியே தெரியவேண்டும் அதுவரை இந்நிலையே பணிபுரிவதற்கு வசதியாக உள்ளது என்று பெயர், புகழை தள்ளி வைத்துள்ள இம்மனிதருக்கு பாலம் கல்யாணசுந்தரம் ஐயா அவர்கள் ரமேஷ் என்பதை முகவரி ரமேஷ் என்று அழைக்கலானார். இன்று எல்லோரும் அப்படியே அழைக்கின்றனர்.

IAS, M.B.B.S படிக்க வைப்பதில் ஆர்வமுள்ள ரமேஷிற்கு பத்தாவது பன்னிரண்டாவது படிக்கும் மாணவர்கள் மேல் ஓர் பார்வையை பதித்து வைத்துள்ளார். தக்க சமயம், சூழ்நிலை அமையும் போது அவர்களையும் இவர்களின் கீழ் கொண்டுவர ஆசை பூண்டுள்ளார்.

மனித நேயத்தை உயிர்ப்போடு வைத்திருந்து தூய்மையான மாணவர்களை உயர்கல்வி மூலம் உருவாக்குவதே முகவரியின் நோக்கம் என்றும், அடுத்த பிறவி உள்ளதா இல்லையா என்பது தெரியாததால் இந்த பிறவியிலேயே ஏராளமான முயற்சிகளின் மூலம் சமுதாயத்திற்கு அர்ப்பணம் செய்வதே முகவரியின் நோக்கம், என்று கூறிய இவர் கிராமத்து இளைஞர்களின் மனதில் நீங்கா இடம்பிடிக்க போகும் இந்த மண்ணின் மைந்தர் கட்டுரையால் மனம் நிறைந்து போனார்.

மேலும் பேசி உதவிபுரிய:

| | | |
|---|---|---|
| ORGANISATION NAME | : | MUGAVARI FOUNDATION |
| FOUNDERS NAME | : | K.RAMESH |
| REGISTERED | : | 72/2007 |
| 80G DEDUCTIONS | : | NIL |
| WEBSITE | : | NIL |
| E-MAIL I.D | : | mugavariramesh@gmail.com |
| CONTACT NOS | : | 9840030942 |
| ACTIVITIES | : | FINANCIAL SUPPORT FOR HIGHER EDUCATION |
| ADDRESS | : | 66/9, KANNAGI STREET<br>KAMARAJARPURAM<br>VELACHERY<br>CHENNAI-600042. |